Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 04 October–December 2024

# சங்ககால மக்களின் வேளாண் கருவிகள் பயன்பாடு

**சா.இம்மானுவேல்,**
பதிவு எண்: 22211174021015
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்,
கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: nellaiimman@gmail.com

நெறியாளர்
**முனைவர் இரா.சௌந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்,
கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: soundarajtamil@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**
சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றன. சங்க காலத்தில் வேளாண்மை பண்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. வேளாண்மை சமூக மாற்றத்திற்கான அடிகோலாகவும், நாடோடியாக வாழ்ந்த மனிதனுக்கு நிலையான வாழ்வைக் கொடுத்த தொழிலாகவும் கருதப்படுகிறது. அத்தொழிலில் மக்கள் பயன்படுத்திய வேளாண் கருவிகள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. அவற்றைக் குறித்து ஆராய்வது இக்கட்டுரையாகும்.

## முன்னுரை
சமுதாயத்தில் வாழும் மக்களின் புழங்குப்பொருட்களையும், தொழில் சார்ந்த கருவிகளையும் கொண்டு குறிப்பிட்ட காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டையும் பழக்கவழக்கத்தையும் அறியமுடியும். அந்தவகையில், வேளாண்மை முதன்மைத் தொழிலாக கொண்டு வாழ்ந்த சங்க கால மக்கள் பல வகையான புழங்குப்பொருட்களையும், வேளாண் கருவிகளையும் பயன்படுத்தியுள்ளனர். வேளாண்மையின் ஒவ்வொரு படிநிலைக்கேற்ப ஒவ்வொருவிதமான கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இன்றைய நவீன விவசாய முறையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய இயந்திரங்களுக்கு சங்க கால வேளாண் கருவிகள் முன்னோடியாக உள்ளன. அத்தகைய சிறப்புமிக்க சங்க கால மக்களின் வேளாண் கருவிகள் குறித்து ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

## வேளாண் கருவிகள்
சங்க கால மக்களின் வாழ்வாதாரமாகவும், நிலையான வாழ்க்கை முறைக்கு வழிகோலியதுமாக விளங்கியது வேளாண் தொழில். உணவு உற்பத்திக்கும் இன்றியமையாததாக இருந்தது. இத்தொழிலில் பல்வேறு வகையான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. உழவுக்கருவிகள்
2. சமன்செய்யும் கருவிகள்
3. விதைப்புக் கருவிகள்
4. இறைப்புக் கருவிகள்
5. பயிர்பாதுகாப்புக் கருவிகள்
6. அறுவடைக் கருவிகள்
7. பதன்செய் கருவிகள்

**உழவுக் கருவிகள்**

தொன்று தொட்டுப் பயன்பாட்டில் இருக்கும் மரக்கலப்பையும், அண்மையில் அறியலால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரும்புக் கலப்பையும் உந்து விசையால் இயங்கும் இயந்திரக் கலப்பையும் இன்றைய உழவுக் கருவியாகும். இவை தவிர, பார் பிடிப்பதற்கென்று பார் கலப்பையும் உள்ளது.

**கலப்பை**

மென்புலமாகிய நன்செய்யையும், வன்புலமாகிய புன் செய்யையும், உழுவதற்கு 'நாஞ்சில்' என்ற உழவுக் கருவியைப் பயன்படுத்தினர். "கால்நடைகளின் துணைகொண்டு நிலத்தை உழவுசெய்யும் முயற்சியின் விளைவே கலப்பை ஆகும்."[1] கலப்பையை 'நாஞ்சில்' என்பது இலக்கிய வழக்கு. கலப்பையின் முதன்மையான உறுப்பு கொழு என்பதாகும். அது நிலத்தைப் பிளந்து உழும் தன்மை உடையது. இந்நாஞ்சிலின் உருவ அமைப்பு, பெண் யானையின் வாய்போல் வளைந்தும், அதில் பொருத்தப் பட்டுள்ள பெருங்கொழு, உடும்பின் முகம் போன்ற தோற்றமுடையதாகவும் இருக்கும். இக்கலப்பை கொண்டு வறள் நிலத்தையும் உழுவர்.

வேளாண்மைக்குப் பயன்படும் முக்கியமான உழவுக் கருவி ஏர்க்கலப்பை. இது நிலத்தைக் கீறி உழுவதற்கு உற்ற துணையாக இருக்கிறது. இது மரத்தினால் செய்யப்படுவது. இதன் முனையில் 'கொலு' எனப்படும் கூரிய இரும்புக்கருவி பொருத்தப்பட்டிருக்கும். ஏர்க்கலப்பை வேளாண் புழங்கு பொருளாக இருந்தமையை,

> **"கார் கலந்தன்றால் புறவே பல உடன்**
> **ஏர் பரந்தனவால் புனமே ஏர் கலந்து**
> **தாது ஆர் பிரசம் மொய்ப்ப,**
> **போதுத ஆர் கூந்தல் முயங்கினள், எம்மே"**[2]

என்று ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

**சமன் செய்யும் கருவிகள்**

உழவுக்குப்பின் நிலத்தைச் சமயன்படுத்தும் கருவிகளும் மண்கட்டிகளை உடைக்கும் 'பலுகுகள்' போன்ற கருவிகளும் வரப்புக் கட்டும் கருவிகளும் இப்போதும் புழக்கத்தில் உள்ளன.

**தளம்பு**

நன்செய் நிலத்தை உழுதபின் வயல், மேடு பள்ளம் இல்லாமல் சமமாக இருத்தற் பொருட்டு, பரம்பு கொண்டு சமன்படுத்துவர். புன்செய் நிலத்தைச் சமப் படுத்தும் கருவிக்குத் 'தளம்பு' என்று பெயர். "தளம்பு-சேறு குத்தி"[3] என்னும் பொருளைத் தருகிறது கலைச்சொல் அகராதி. சேற்று வயலைச் சமன்படுத்தும் போது 'தளம்பில்' மீன்கள் அகப்பட்டுத் துண்டுபடுவதும் உண்டு.

தளம்பு என்பது நன்செய் நிலமாயின் சேற்றுக் கட்டிகளைக் களைய, சேறாக்கப் பயன்படுத்தப்படும் கருவியாக அடையாளம் காணப்படுகிறது.

> **"மலங்குமிளிர் செறுவில் தளம்புதடிந்திட்ட**
> **பழன வாளை"**[4]

என்ற அடிகளில் வாளை மீன்கள் தளம்பிடை மாட்டி வெட்டுப்பட்டன என்ற செய்தி இடம் பெறுகிறது. இதன் வழி, 'தளம்பு' என்பதுத இரும்பு அல்லது உறுதியான மரத்தினால் உருவாக்கப்பட்ட, உருளை வடிவ வேளாண் கருவி பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது.

**விதைப்புக் கருவிகள்**

விதைப் பெட்டிகளும், அவற்றை நிலத்தில் விழச் செய்யும் குழாய்களும் இணைந்த விதைப்புக் கருவிகள் இன்றைய அறிவியலின் வெளியீடுகள். இவை சரியான

இடைவெளியில் விதைகளை விதைக்க உதவுகின்றன. விதைகளோடு உரத்தையும் கலந்து இடும் கருவிகளும் உள்ளன.

உழுது பண்படுத்திய நிலத்தில் விதைப்பதற்கான விதைகளை எடுத்துச் செல்ல வட்டி எனப்படும் கூடை பயன்படுத்தப்பட்டது. இதனைப் பனையோலைப் பெட்டிகள் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வட்டிகள் குறித்து,

**“வித்தோடு சென்ற வட்டி பற்பல”**[5]

**“விதைக்குறு வட்டி போதொடு பொதுள”**[6]

ஆகிய அடிகள் புலப்படுத்துகின்றன.

**இறைப்புக் கருவிகள்**

இறைப்புக் கருவிகளில் தற்போது மின்சாரத்தினால் இயங்கும் கருவிகள் உள்ளன. ஆனால் சங்க காலத்தில் ஆம்பி, கிழார், முகவை போன்ற இறைப்புக் கருவிகள் பயன்பாட்டில் இருந்தன.

**ஏற்றம்**

ஆற்றில் நீர் குறைந்த போது ஆற்றிலும் குளத்திலும் கிணற்றிலும் உள்ள நீரை வயலுக்குப் பாய்ச்சுவதற்கு இறைப்புக் கருவிகளைப் பயன்படுத்தினர். அந்நீர் நிலைகளில் நீரை ஏற்றம் வைத்து இறைத்தனர். அவ்வேற்றத்தில் ‘ஆம்பி’ என்ற கருவி பொருத்தப்பட்டிருக்கும். வாய் அகன்ற ஆம்பு கொண்டு நீரை முகந்து, ஏற்றத்தின் வழியாக மேலே கொணர்ந்து, வாய்க்காலில் செலுத்திப் பாய்ச்சுவர். ஆம்பியை, ஏற்ற மரத்துடன் இணைக்கப்பட்டு இயங்கும் ‘பன்றிப்பத்தர்’ என்றும் கூறுவர். இக்காலத்தில் இதனைப் ‘பறி’ என்பர்.

**கிழார்**

குளத்திலிருந்து நீரை இறைத்துப் பாசனம் செய்யப் பயன்படுத்தும் மற்றுமொரு கருவிக்குக் கிழார் என்று பெயர். இதனை மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய பூட்டைப் பொறி என்பர். இக்காலத்தில் இதனை ‘இறைகூடை’ என்று வழங்குவர்.

**முகவை**

ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறுகளில் நீண்ட கயிற்றைக் கட்டிக்கையால் நீர் இறைப்பர். கயிற்றின் நுனியில் கட்டப்படும் குடம் போன்ற கருவிக்கு முகவை என்று பெயர். இக்கருவியின் கழுத்துப்பாகம் குறுகியிருக்கும். குடத்திலும் சற்றுச் சிறியதாகிய இம் முகவையில் நீரை இறைத்துக் கால்நடைகளுக்கு ஊற்றுவர். இதற்குப் பத்தல் என்ற பெயரும் உண்டு.

இறைப்புக் கருவிகளின் எண்ணிக்கையையும் அமைப்பையும் நோக்க ஆற்றுப் பாசனமும் குளத்துப் பாசனமுமே மிகுதி என்பதும், குளத்தில் நீர் வற்றிய போதே ஆம்பியும் கிழாரும் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும் எனவும் எண்ண இடம் உண்டாகிறது. புன்செய் வேளாண்மையில் இறைப்புக் கருவிகளின் பயன்பாடு குறிக்கப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள்**

பயிர்சால்களின் இடைவெளியில் கருவியைச் செலுத்திக்களை எடுக்க, ‘ஊடு சாகுபடிப் பலுகு’ என்ற கருவி உதவுகின்றது.

தற்போதைய பயிர்களைப் பூச்சிகளும், நோய்களுமே பெரும்பாலும் தாக்குவதால், இவற்றைக் கட்டுப்படுத்தப் பூச்சிக்கொல்லி மருந்துகளும், பூசணக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. பெரும் பண்ணைகளில் தானே இயங்கி, ஓசையை எழுப்பிடம் பறவை விரட்டுக் கருவியின் துணை கொண்டு, தானியங்களைத் தின்ன வரும் பறவைகள் விரட்டப்படுகின்றன. நெல் வயல்களில் தானியங்களைக்

கொண்டு செல்லும் எலிகளைக் கொல்லக் கிட்டிகளும் மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. இரவில் நுழையும் பன்றிகள். நாய்கள் போன்றவற்றை, மின்சாரம் பாய்ச்சப்பட்ட வேலிகளைக் கொண்டு துரத்துவது இன்றைய நடைமுறையாகும்.
விளையும் பயிர்களைக் களைகளினின்று காப்பாற்றவும் விளைந்த பயிர்களைப் பறவைகள் மற்றும் விலங்குகளின்றும் காப்பாற்றவும் சங்க கால மக்கள் பல வகையான கருவிகளைக் கையாண்டனர்.

**துளர்**
நன்செய் நிலத்து நெல் வயலில் வளர்ந்த களைகளைக் கையால் பிடுங்கி எறிவர். புன்செய் நிலத்தில் வளர்ந்த ககைளைத் ‘துளர்’ என்ற கருவியால் வெட்டி எடுத்தனர். இந்நாளில் இக்கருவியைக் ‘களைக்கொட்டு’ என்பர்.

**அரிப்பறை**
இது “அரித்து எழுகின்ற பறை ஓசை”யை உடையது என்பர். நெல்லரியும் உழவர் வயலில் விளைந்த நெல்லை அறுக்கப் புகுமுன், அவ்வயலில் கூடமைத்து வாழும் பறவையினங்கள் முன்னதாக அறிந்து ஏதமின்றி நீங்குவதற்காக இப்பறையோசையை எழுப்புவது பண்டைத் தமிழர் மரபாகும்.

**பரண்**
தினைப் புனங்கள் பரந்துபட்ட பகுதியை உடையன. மலைச்சாரலில் அமைந்திருப்பதால் மேடு பள்ளங்கள் நிறைந்தும் இருக்கும். இப்பரப்பினில் பறவைகள் படா வண்ணமும் விலங்குகள் புகா வண்ணமும் பாதுகாக்க வேண்டும். அதனால் தினைப் புனத்தின் உயர்ந்த பகுதியில், எல்லாப் பக்கமும் பார்வை விழும்படியாக உள்ள பகுதியில், பரண் அமைப்பர். பரணை இதணம், கழுது, பணவை என்ற பெயர்களால் வழங்கினர். தினைப்புனம் உள்ள பகுதியில் ஆசினிப் பலா போன்ற உயர்ந்த மரத்தின் மீதோ உயர்ந்த பாறை அல்லது குன்றின் மீதோ பரண் அமைப்பர். இப்பரண் யானை தொட முடியாத அளவிற்கு உயரமானதாக இருக்கும். வேங்கை மரத்தின் மேலே சந்தனமரக் கிளைகளைக் கொண்டு கட்டி, புலித்தோல் பரப்பி, பரணின் மேற்பரப்பை அமைப்பது உண்டு. அதன் மீது நின்று கொண்டு, மகளிர் பகற்பொழுதில் குளிர், தழல், தட்டை முதலிய கருவிகளில் ஓசை எழுப்பித் தினைப் புனத்தில் கதிர்களைக் கவரவரும் பறவைகளையும் விலங்குகளையும் விரட்டுவர்.

“நற்றிணைப் பாடலில் (பா.351) நிலம் முழுமையும் காணும்படி உயர்ந்ததாகவும் ஆண் யானைகள் கூட கண்டு அஞ்சுகிற புலித்தோலால் வேயப்பட்ட பரணினை அமைத்துத் தினைகளைக் காத்ததனைக் குறிப்பிட்டுள்ளது.”[7]

**குளிர்**
குளிர் என்னும் கருவி கொண்டு தினைப் புனத்தில் மேய வரும் கிளிகளை விரட்டுவர். “குளிர் - கிளி கடி கருவி, அரிவாள்”[8] இது மகளிர் பயன்படுத்தும் மென்மையான கருவியாகும். கிளி கடியும் கருவியாகிய குளிர், இசைபாடுங்கால் இசைக்கு ஏற்பப் போடப்படும் தாளத்தைப் போன்று ஒலிக்கும் தன்மை உடையது. அதனால் கிளிகள் இதன் ஓசை கேட்டு மயங்கித் தினைப் புனத்தை விட்டுப் போகாமல் இருப்பதும் உண்டு.

**தட்டை**
விளைந்த கதிர்களைக் கவரவரும் கிளிகளையும் பறவைகளையும் குறிஞ்சி நிலப் பெண்கள் இத்‘தட்டை’யைப் புடைத்து ஓட்டுவர். ஐவன நெல்லைக் கவரவரும் கிளிகளையும் தட்டையைப் புடைத்து ஓட்டுவதுண்டு. தட்டையை ஒலிக்குங்கால் அருகிலுள்ள மருத நிலப் பறவைகளும் எழுந்து ஓடும். தட்டையின் ஒலியைத் தேரையின் ஒலிக்கு உவவை கூறுவது உண்டு.

விளைந்திருக்கும் தினைப் பயிரைக் கவர வரும் மயில், கிளி போன்ற பறவைகளை விரட்ட இக்கருவியைத் தட்டி ஒலி எழுப்புவர்.

**“குளிரும் தழலும்தட்டையும் மூன்றும்**
**கிளி கடி கருவி எனக் கிளத்தினரே”[9]**

என்று சேந்தன் திவாகர நிகண்டு கிளிகடி கருவிகளாகக் குளிர், தழல், தட்டை ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது.

ஐங்குறுநூற்றிலும்,

**“பின் இருங்கூந்தல் நல்நுதல் குறமகள்**
**மென் தனை நுவணை உண்டு, தட்டையின்**
**ஐவனச் சிறுகளி கடியும் நாட”[10]**

என்ற அடிகளில் பின்னப்பட்ட அழகிய கரிய கூந்தலையுடைய குறமகள், தங்களுடைய தினைப் புனத்தில் தினையைக் கொத்தவரும் சிறுகிளிகளை விரட்டுவதற்காகத் தட்டையைக் கொண்டு ஒலி எழுப்பி விரட்டினாள் என்ற செய்தி பெறப்படுகிறது.

**தழலை**

தினைப்புனத்துக் கதிர்களைக் கவரவரும் கிளி முதலிய பறவையினங்களை விரட்ட, மரத்தின் மீது பரண் அமைத்து, அதில் அமர்ந்து கொண்டு அம்மலைச் சாரலில் உள்ள கொடிப் பிரம்பினால் பின்னிய தழல் என்னும் கருவியைக் கையால் சுழற்றிய அளவில் அதில் ஓசை உண்டாகிப் பறவைகள் விரட்டப்படும். தழலை என்ற கருவியைச் சுழற்றியும், தட்டை என்ற கருவியைப் புடைத்தும் தினைப் புனைத்தைப் பாதுகாத்தனர் என்பதால் இக்கருவிகளை இயக்கும் முறை தெளிவாக்கப்படுகின்றது. இக் கருவிகளில் மென்மை வாய்ந்த ஒலி எழும், குளிர், தட்டை, தழலை இம்மூன்றும் பெண்களால் மட்டுமே இயக்கப்பட்ட பயிர்பாதுகாக்கப்புக் கருவிகள் என்பதை அறிய முடிகின்றது.

**ஞெகிழி**

யானை முதலாய விலங்குகள் நெருப்புக்கு அஞ்சும். இதை உணர்ந்த தினைப்புனம் காவல் காப்போர் கொள்ளியினாலும் யானையை விரட்டுவர். கொள்ளிக் கட்டைக்கு ‘ஞெகிழி’ என்பது இலக்கிய வழக்காகும்.

**குறுந்தடி**

தினைப் புனத்துத் தாள்களைக் கடித்து அழிக்கும் முயல்களை விரட்ட அதற்கென வலிய காழ்ப்பு ஏறிய குறுந்தடியைப் பயன்படுத்தினர். குணிலா என்பது குறுந்தடியாகும். முரத்தில் பழுத்திருக்கும் பழங்களை கோவலர் உதிர்க்க, முரசறைவோன் முரசறைய என இக்குறுந்தடியைப் பயன்படுத்துவர். குணில் என்பதற்குக் “குறுந்தடி, பறை அடிக்கும் கடிப்பு” என்று சங்க இலக்கியச் சொல் தொடர் விளக்க அகராதி பொருள் கூறுகிறது.

**“பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலன்**
**கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்**
**யாணர் ஊர”[11]**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி மரத்தில் பழுத்திருக்கும் மாம்பழங்களை உதிர்க்கக் கரும்பினைக் குணிலாகப் பயன்படுத்தியமையை குறிப்பிடுகின்றது.

**பொய்ப்புலி**

“விளைநிலத்தில் பயிரிடப்பட்டிருக்கும் பயிரினைப் பல்வேறு விலங்குகளும் பறவையினங்களும் கவர்ந்து தின்ன வரும். அவைகளிடமிருந்து பயிர்களைக் காக்க வேளாண் மக்கள் பல்வேறு உத்திகளைக் கைக்கொள்வர். அவற்றுள் சோளக்காட்டு பொம்மை எனப்படும் பொய் உருவமும் ஒன்று. மனிதனைப் போன்ற உருவம் செய்து வயலில் வைத்தும், விலங்குகளும், பறவையினங்களும் அஞ்சி ஓடிவிடும்.”[12]

இதேபோன்று, தினைப்புனத்துப் பயிரை எளிய விலங்குகள் அழிக்காமல் காக்கப் பெண்புலிபோல் உருவம் செய்து அதற்குக் கழலைக் காயைக் கண்ணாக அமைத்து, உயிருள்ளது போன்ற தோற்றத்துடன் நிறுத்தியிருப்பர். இப் பெண் புலியின் பொய்த் தோற்றம் கண்டு, அப்பக்கம் ஆண் புலியின் இயக்கம் இருக்கும். பிற விலங்கினங்கள் புலிக்கு அஞ்சித் தினைப் புனத்திற்குள் வாரா. இஃது உயிர்களிடையே அச்ச உணர்வை உண்டாக்கி அவைகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் ஓர் உத்தியாகும். ஐங்குறுநூற்றில் குறிஞ்சி நிலத்தில் குறவர்கள் விதைத்துள்ள தினைப்பயிரைக் கவர வரும் விலங்குகளிலிடமிருந்து பாதுகாக்க, கழற்றிக்காயைக் கண்களாகப் பொருந்திப் பெண் புலியின் உருவத்தைச் செய்து தங்கள் விளை நிலங்களில் நிறுத்தி வைத்துப் பயிரினைக் காத்த செய்தினை,

**“கல்முகை வயப்புலி கழங்கு மெய்பபடூஉ**
**புன்புலம் வித்திய புனவர்”**[13]

என்ற அடிகள் சுட்டுகின்றன.

## அறுவடைக் கருவிகள்

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்பால் உருவான நெல் அறுவடை இயந்திரம் நன்செய் நிலங்களில் பயன்படத்தப்படுகிறது. அறுத்த நெற்கதிரிலிருந்து, மணிகளைப் பிரித்தெடுக்கும் கருவிகளும் பதர்களைப் பிரித்தெடுக்கும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சங்க காலத்தில் அறுவடைக் கருவியில் வாள் முக்கிய இடம்பெறுகிறது.

## குயம்வாள்

விளைந்த நெல்லை அறுவடை செய்ய வளைந்த அரிவாளைப் பயன்படுத்தினர். அதற்குக் குயம் என்று பெயர். வாள் என்ற கருவியையும் பயன்படுத்தியுள்ளனர். நெல்லரிவோர் தங்கள் கூர்வாள் மழுங்கின் வயலில் புதைத்துள்ள ஆமையோட்டில் தீட்டிக் கூராக்கிக் கொள்வர். இத்தகைய அரிவாளுக்கு ‘குயம்’ என்ற பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளமையை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இதைப்பற்றி,

**“கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து”**[14]
**“நெல்லரி தொழுவர் கூர்வான் உற்றென”**[15]

என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அறுவடை செய்வதற்கான கருவிகளுள் ‘குயம்’ உழவுத் தொழிலுக்குப் பயன்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அறுவடை காலத்தே நெல்லை அரிவதற்குக் கூரிய வாள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அரிவாள் என்று அழைக்கப்படும்.
இக்கூர்வாளினை,

**“நெல் அரி தொழுவர் கூர்வாள் உற்றென”** [16]

என்கிறது நற்றிணை.

வறட்சி காலத்தே, நெற்கதிரை அரிவாரது கொய்யும் வாள் செயலற்று தம் வாய் மடங்கிப் போயின என்ற செய்தியை,

**“அரிநர் கொய்வாண் மடங்க வளைநர்”**[17]

என்ற அடி பதிவு செய்கிறது.

## பதன்செய் கருவிகள்

அறுவடை செய்த தானியங்களைப் பதப்படுத்த சில கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க கால மக்கள் பொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமின்றி அவற்றைப் பதம் செய்யும் முறைகளையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

**குதிர்**

“நெல் முதலிய தானியங்களை சேமிக்கும் பெரிய கூடு.”[18] புன்செய் நிலத்து விளைந்த வரகு முதலியவிளை பொருள்களையும் குதிர்களில் இட்டு வைப்பது மரபு. அக்குதிர்கள் பெண் யானைகள் நின்றாற் போன்ற பெரியதாகவும் பலவாகவும் இருந்தன. அக்குதிர்கள் வீட்டின் மற்றத்தில் அமைக்கப்பட்டிருக்கும். அக்குதிரினை ‘‘தொகுகூடு’’ என்றும் வழங்குவர். இருப்பையின் அடிமரத்தைக் குதிருக்கு உவமை கூறுவர். நெல்லை மூடை மூடையாகக் கட்டி அடுக்கி வைத்தலும் உண்டு.

நன்செய் விளைவாகிய நெல்லைச் சேமித்து வைப்பதைக் ‘கூடு’ என்றும், ‘நெடுங்கூடு’ என்றும், புன்செய விளைவாகிய வரகு முதலிய தானிய்களைச் சேமித்து வைப்பதைக் ‘குதிர் என்றும் ‘தொடுகூடு’ என்றும் வழங்கும் வழக்கம் இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**“பிடி கணத்து அன்ன குதிர் உடை முன்றில்”[19]**

**“கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை”[20]**

போன்ற சங்கப்பாடல் அடிகள் சங்க காலத்தில் குதிரின் பயன்பாடு இருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

சங்க கால மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய வேளாண் தொழிலில் பயன்படுத்தப்பட்ட கருவிகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. அக்கருவிகள், உழவுக்கருவிகள், சமன்செய்யும் கருவிகள், விதைப்புக் கருவிகள், இறைப்புக் கருவிகள், அறுவடைக் கருவிகள், பயிர்பாதுகாப்புக் கருவிகள், பதன்செய் கருவிகள் என்னும் வகைபாடுகளாக பாகுபடுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. அவற்றுள் உழவுக்கருவியாக கலப்பையும், சமன்செய்யும கருவியாக தளம்பும், இறைப்புக்கருவியாக கிழாரும், அறுவடைக் கருவியாக வாளும், பயிர்பாதுகாப்புக் கருவியாக தட்டை, தழலை போன்றவையும், பதன்செய் கருவியாக குதிரும் முக்கிய இடம்பெற்றமையை இக்கட்டுரையின்வழி அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

1. ஞா.ஸ்டீபன், இலக்கிய இனவரைவியல், ப.59, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.
2. ஐங்குறுநூறு, பா.417
3. இலக்கியத்தில் வேளாண்மைக் கலைச்சொற்கள், ப.14, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர், 1981.
4. புறம், பா. 61: 3-4, தமிழ்ச் செவ்வியல் நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், 2009.
5. பாலசுப்பிரமணியன்.வெ.(உ.ஆ.), நற்றிணை, பா.210:3, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
6. குறுந்தொகை, 155:2
7. ஜே.ஜெயரதி பொன்மலர் (தொ.ஆ.), பன்முக நோக்கில் சங்க இலக்கியங்கள், மு.தெய்வேந்திரன் (க.ஆ.), நற்றிணை சுட்டும் தொழில்கள், ப.305, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2012.
8. இலக்கியத்தில் வேளாண்மைக் கலைச்சொற்கள், ப.10
9. சேந்தன் திவாகர நிகண்டு, ப. 259)
10. ஐங்குறுநூறு, பா.285:1-3
11. மேலது, பா.87 : 1-3
12. தா.இரா.இராமலெட்சுமி (க.ஆ.), ஐங்குறுநூற்றில் வேளாண் புழங்கு பொருட்கள், ப.202, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
13. ஐங்குறுநூறு, பா.246:2-3
14. பொருநராற்றுப்படை, பா.245
15. புறம், பா.379
16. நற்றிணை, பா.195:6

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

17. பதிற்றுப்பத்து, பா.19:22
18. solalvallan.com
19. பெரும்பாணாற்றுப்படை, பா.186
20. செயபால். இரா.(உ.ஆ.), அகம், பா.75, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.